பக்கங்கள்: எட்டு

யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 11 ஞாயிற்றுக்கிழமை (25-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:178

# ஓமந்தையிலும் நெடுங்கேணியிலும் மீண்டும் கடும் சண்டை மூண்டது!

## 2 ஆம் கட்ட படை நடவடிக்கை நேற்று ஆரம்பம்

கொழும்பு, மே 25

**வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் இடையேயான தரைவழிப் பாதையைத் திறக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட "வெற்றி உறுதி" (ஜெய சிகுறு) இராணுவ நடவடிக்கையின் 2 ஆம் கட்டம் நேற்று ஆரம்பமானது. நேற்றுக்காலை ஓமந்தையில் இருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்ட படையினருடன் விடுதலைப் புலிகள் கடும் சமரில் ஈடுபட்டனர்.**

கைப்பற்றிய ஓமந்தையை கடந்த ஐந்து நாள்களாகப் பலப்படுத்திய படையினர் நேற்றுக்காலை தங்களது நகர்வை ஆரம்பித்த போது விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர். அதைத் தொடர்ந்து கடும் சமர் இடம் பெற்றது.

நேற்று இடம்பெற்ற சண்டையில் 15படையினர் கொல்லப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிப்பதாகவும்—

ஆனால் பாதுகாப்பு அமைச்சு இது குறித்த தகவல்கள் எதையும் வெளியிடவில்லை எனவும் ஏ. எப் பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

அதே நேரம் விடுதலைப் புலிகள் தரப்பின் இழப்புகள் குறித்து தகவல்கள் எவையும் வெளிவரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

நெடுங்கேணியிலும் படையினர் புளியங்குளத்தை நோக்கி முன்னேற முயற்சிப்பதாகவும் அங்கும் கடும் சண்டை நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஓமந்தையில் இருந்து புளியங்குளத்தை நோக்கி நகர முற்படும் படையினர் ரம்பைக் குளத்தை அண்மித்திருப்பதாக மற்றும் ஒரு செய்தி தெரிவித்தது.

(இ-5-10-164)

## ஓமந்தையில் 3,000 கடற்படையினர்

கொழும்பு, மே 25

ஓமந்தையில் இருந்து முன்னேறும் படையினருக்கு உதவி வழங்க மூவாயிரம் கடற்படை வீரர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10))

# 2 டாங்கிகள் துருப்புக்காவி வாகனம் நேற்றைய சண்டையில் அழிப்பு!

## 20 படையினர் இறந்ததாகவும் தெரிவிப்பு

வவுனியா, மே 25

நேற்று ஆரம்பமான இரண்டாவது கட்ட யுத்தத்தில் படையினரின் ரி. 55 ரக டாங்கிகள் இரண்டும் துருப்புக் காவி வாகனம் ஒன்றும் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டதாக புலிகளின் 'குரல் வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

படையினரின் இரண்டு டாங்கிகள் சேதப்படுத்தப்பட்டதாகவும், சண்டைகளில் 20 படையினர் உயிரிழந்ததாகவும் 75 படையினர் காயம் அடைந்ததாகவும் அது மேலும் தெரிவித்தது.

முதலாவது கட்ட யுத்தத்தில் 200 படையினர் மரணமடைந்ததாகவும் 600 படையினர் காயமடைந்ததாகவும் பெரும்பாலும் ஒரு முழுபட்டாலியனே செயல் இழந்துள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமானங்கள், அம்புலன்ஸ்கள் நடமாட்டங்கள் அதிகரிப்பு

வவுனியா, மே 25

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையின் இரண்டாவது கட்டம் நேற்று ஆரம்பமானதையடுத்து வவுனியாவில் அம்புலன்ஸ்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது. விமானங்களும் பெருமளவு பறந்து கொண்டிருந்தன.

வவுனியா நகருக்கு குண்டுச் சத்தங்கள் கேட்பதாக எமது வவுனியாச் செய்தியாளர் தெரிவித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் பெரும் எண்ணிக்கையில் புளியங்குளம் பகுதியில் குவிப்பு

கொழும்பு, மே 25

'வெற்றி உறுதி' படையினரின் இரண்டாவது கட்ட இராணுவ நடவடிக்கை ஆரம்பமானதை அடுத்து புளியங்குளத்தில் விடுதலைப் புலிகள் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டுவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் புளியங்குளத்தில் புதிய யுத்தமுனை ஒன்றைத் திறந்திருப்பதாகவும்—

கடும் எதிர்ப்பை படையினர் எதிர்நோக்க வேண்டிவரும் என்றும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் யுத்தத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதாகவும் படையினரும் விடுதலைப் புலிகளும் நீண்டதூர ஆட்லறிகளைப் பயன்படுத்த ஆரம்பித்திருப்ப தாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

படையினர் ஓமந்தையில் இருந்து புளியங்குளம் நோக்கியும் நெடுங்கேணி நோக்கியும் ஆட்லறி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

புலிகள் இராணுவ நடவடிக்கை நடைபெறும் பிரதேசங்களை அண்டி உள்ள சிங்களக் கிராமங்களை நோக்கி ஆட்லறித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

(இ)

# வன்னிக்கு உணவு எடுத்துச்செல்ல படையினரின் அனுமதி இல்லை

## களஞ்சியங்கள் வெறுமை நிலையில்

கொழும்பு, மே 25

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உணவுக் களஞ்சியங்கள் வெறுமை நிலையில் உள்ளன. கடந்த வாரம் வன்னிக்கு உணவு எடுத்துச் செல்ல செஞ்சிலுவை சர்வதேசக் குழு முயன்றது. ஆனால் படையினரின் அனுமதி அதற்குக் கிடைக்கவில்லை.

'ராவய' பத்திரிகையின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஜீ.சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை

# முன்னதாகக் கிடைத்த முடிவுகளில் யாழ்.இந்துக்கல்லூரி முன்னணியில்

## அடுத்ததாக வேம்படி, சென். ஜோன்ஸ்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கான ஜி. சீ. ஈ சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் புதன் கிழமை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது போன்று [illegible] பாடசாலைகள் இவ்வற்றின் சிறப்புப் பெறு பேறுகளை நேற்று இரவு பெறக்கூடியதாக இருந்தது.

ஏழு பாடங்களிலும் அதற்கு மேலும் "டி" எடுத்துள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

★ யாழ். இந்து 16 பேர்.
★ வேம்படி மகளிர் 9 பேர்.
★ சென் ஜோன்ஸ் 8 பேர்.
★ சுண்டுக்குளி மகளிர் 4பேர்.
★ மகாஜனா 2 பேர்.
★ சுளிபுரம் விக்ரோறியா 2 பேர்.
★ உடுவில் மகளிர் 2 பேர்.
★ யூனியன் கல்லூரி ஒருவர்.
★ சென்.பற்றிக்ஸ் ஒருவர்.
★ சாவகச்சேரி இந்து ஒருவர்.
★ கொக்குவில் இந்து ஒருவர்.
★ யாழ். இந்து மகளிர் ஒருவர்.
★ சாவகச்சேரி றிபேக் ஒருவர்.
★ ஹாட்லி ஒருவர்.

# தேவையான நேரம் இரத்தம் வழங்க படையினர் தயார்

## இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 25

யாழ். போதனா வைத்திய சாலையில் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு ஏற்படும் போது இரத்த தானம் செய்ய படையினர் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல, 512 ஆவது படையணியின் அதிகாரி பிரிகேடியர் காமினி ஜெயசுந்தர ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இம் மாதம் 15 ஆம் திகதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசுவை - தரமானதயாரிப்பு - வரட்சியில்
குளிர்ச்சி தரும்

## சிவாஸ் கிறீம் கவுஸ்

ஒரு முறை சுவைத்துப் பார்த்து எமது ஐஸ் கிறீமின் சுவையை அறிந்து கொண்டால் நீங்கள் தவறாது நாடுவது.

## சிவாஸ் ஐஸ்கிறீம்

உங்கள் மங்கள நிகழ்வுகளின் தேவையை உடனுக்குடன் உங்கள் இல்லங்களுக்கு விநியோகித்துப் பூர்த்தி செய்யத் தயாராக இருப்பவர்கள்:

**சிவாஸ் கிறீம் கவுஸ்,**
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பழைய முகவரி:
செல்வச் சந்நிதி, தொண்டமனாறு. (47242)



## பெயர் மாற்றம்

ஊர்காவற்றுறை தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம் என்று அழைக்கப்பட்டு வந்த எமது சங்கம் 18-04-97 தொடக்கம்
**“ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்”**
எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் தெரியப்படுத்துகின்றோம்.

க. கனகராசா — தலைவர்
பி. வின்சன்ட் — செயலாளர்

ஊர்காவற்றுறை பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

(47155)


## ஜி. சீ. ஈ. உயர்தர பொதுப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 25

தொண்டமனாறு வெளிக்கள நிலையம் நடத்தும் ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பொதுப் பரீட்சைகள் அடுத்த மாதம் முதல் நடைபெறவுள்ளன.

ஆண்டு 13 மாணவர்களுக்கான பரீட்சை அடுத்த மாதம் 25 ஆம் திகதியும்— ஆண்டு 12 மாணவர்களுக்கான பரீட்சை ஜூலை மாதம் 10 ஆம் திகதியும் ஆரம்பமாகும். (ஐ)

## தமிழக மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

இந்திய மீனவர்கள் இந்திய கடலாதிக்கப்பகுதிக்குள் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது இலங்கைக் கடற்படையினரால் கண்மூடித்தனமாகத் தாக்கப்படுவதைக் கண்டித்து சுமார் 2 ஆயிரம் மீனவர்கள் நாகபட்டினத்தில் கடந்த புதன்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

காயிதே மில்லத் மாவட்டத்தின் 18 கிராமங்களைச் சேர்ந்த இந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட மீனவர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு கோஷமிட்டனர். (இ-5)


இதோ வெளிவந்து விட்டது!

### “நாமும் சுற்றாடலும்” ஆண்டு 5

இது 1997 புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக எழுதப்பட்டு வெளிவந்த முதலாவது நூலாகும். மேலும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கு அதிசிறந்த வழிகாட்டி நூல்.

வெளியீடு:
**ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை,**
யாழ்ப்பாணம். (47169)


## கண்ணீர் அஞ்சலி

**திருமதி சிவானந்தன் கலாமணி**
(உரும்பிராய் றோ. க. பாடசாலை உப அதிபர்)

உரும்பிராய் வடக்கு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் திரு. சி. சிவானந்தன் அவர்களின் பிரியபத்தினி திருமதி சிவானந்தன் கலாமணி அவர்களுடைய திடீர் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்ம சாந்தியின் பொருட்டு பிரார்த்திக்கின்றோம்.

விவசாய சம்மேளனம்,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(47164)

வலி. கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின்

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் கௌரவ தலைவர்
**திரு. சி. சிவானந்தன்**
அவர்களின் பிரிய பத்தினி
**திருமதி கலாமணி சிவானந்தன்**
(உப அதிபர் றோ. க. பாடசாலை, உரும்பிராய்)

அவர்களின் திடீர் மறைவினால் துயரமடைந்துள்ள அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

பணிப்பாளர்கள்,
வலி. கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்,
கோப்பாய்.
(47165)


## ‘கெயர்’

## விவசாயத்திட்ட பயனாளிகளுக்கு


பின்வரும் திகதியில் மண்வெட்டிகள் தங்கள் பகுதி கிராம சேவையாளர் பிரிவில் வழங்கப்படவுள்ளன. தயவு செய்து பயனாளிகள் தங்களினது அடையாள அட்டை/குடும்ப அட்டை ஆகியவற்றுடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| திகதி | நேரம் | பி. செ. பிரிவு | இடம் | |
|---|---|---|---|---|
| 26 - 5 - 97 திங்கள் | 09. 30 | உடுவில் | ஏழாலை மத்தி, ஏழாலை கிழக்கு, குப்பிளான் | — கி. சே. அலுவலகம் |
| | 12 30 | | புன்னாலைக்கட்டுவன். ஈவினை | — ஈவினை பிள்ளையார் கோயில் மண்டபம் |
| | 2 30 | | சுன்னாகம் தெற்கு, வடக்கு | — முத்தமிழ் மண்டபம், சுன்னாகம் |
| | 3. 50 | | சுன்னாகம் கிழக்கு | — சிவன் சிறுவர் பாடசாலை |
| 27 - 5 - 97 செவ்வாய் | 9. 30 | பருத்தித்துறை | அல்வாய் முத்துமாரி அம்மன் கோயில் | |
| | 2. 30 | கரவெட்டி | கரணவாய் நாவலர்மடம் வித்தியாலயம் | |
| 29 - 5 - 97 வியாழன் | 8 30 | சாவகச்சேரி | கைதடி, மறவன்புலம் | — கமநல சேவை நிலையம் கைதடி |
| | 11. 00 | | மட்டுவில், சந்திரபுரம் நுணாவில், கல்வயல், சரசாலை | — கி. சே அலுவலகம், சந்திரபுரம் |
| | 01. 00 | | மீசாலை, மண்டுவில், ராமாவில் கொடிகாமம், அல்லாரை, வேலம் போக்கடி, கச்சாய் | — கமநல சேவை நிலையம், மீசாலை |
| | 3. 00 | | மந்துவில், தாவளை, இயற்றாளை, மாசேரி | — வரணி மகாவித்தியாலயம், வரணி |
| | 4. 00 | | உசன், கொடிகாமம் விடத்தற்பளை, கெற்பலி எழுதுமட்டுவாள் பாலாவி, கரம்பகம் | — கந்தசாமி கோயில் உசன் |
| 30 - 5 - 97 வெள்ளி | 9 00 | கோப்பாய் | கோப்பாய், கல்வியங்காடு நவக்கிரி, நீர்வேலி, அச்செழு | — கோப்பாய் மத்தி சன சமூகநிலையம் |
| | 1. 00 | | அச்சுவேலி, ஆவரங்கால், பத்தைமேனி, புத்தூர் | — கி சே. அலுவலகம், அச்சுவேலி |
| | 3. 00 | | ஊரெழு, உரும்பிராய் | — செல்லப்பா சனசமூக நிலையம் |
| 31 - 5 - 97 சனி | 9. 00 | உடுவில் | இணுவில் | — இ/மத்திய ஆரம்ப பாடசாலை |
| | 11 00 | நல்லூர் | திருநெல்வேலி | — கலாமன்றம், திருநெல்வேலி |
| | 12. 00 | நல்லூர் | கோண்டாவில் | — கி.சே. அலுவலகம், கோண்டாவில் |

திட்ட உத்தியோகத்தர்
‘கெயர்’ யாழ்ப்பாணம்

(47153)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இ. இரத்தினகோபால்**
(பாலர் கல்விக் கழக நிறுவுநர்)

தோற்றம்: 09 — 03 — 1934
மறைவு: 17 — 05 — 1995
திதி: 25 - 05 - 97 திருதியை

ஈராண்டு சென்றதே இன்று நீர்
எம்மை விட்டுப் பிரிந்து சென்று
தீராது நம் கவலை மாறாது எம் துன்பம்
நினைக்கின்றோம் இன்று உமையே.

பிரிவால் துயருறும்;
மனைவி,
உற்றார், உறவினர்கள்.

4965, யாழ். வீதி. (சி/780)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதிய அரசை எதிர்த்து

# கின்ஸாசாவில் ஆர்ப்பாட்டம்

கின்ஸாசா, மே 25

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் ஆட்சி அதிகாரத்தில் முன்னாள் பிரதமரும் மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கவருமான ஷிஸிகேடிக்கு இடமளிக்கப் படாததற்கு எதிர்ப்புத் தெரிவித்து கின்ஸாசாவில் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

லோறன் கபீலா தலைமையிலான புதியஅரசாங்கத்தை தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று நூற்றுக் கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காக அரச படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

லோறன் கபீலாவின் புதிய அரசாங்கத்தை எதிர்க்குமாறு முன்னாள் பிரதமர் ஷிஸிகேடி நாட்டு மக்களிடம் கேட்டுள்ளார்.

முன்னாள் அதிபர் முபுட்டுவினால் இரு தடவைகள் பிரதமர் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்ட ஷிஸிகேடிக்கு கபீலாவின் அரசில் பிரதமர் பதவி வழங்கப்படும் என்று அவரது தீவிர ஆதரவாளர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அதிபர் லோறன் கபீலா அமைத்த புதிய அமைச்சரவையில் அவரது பெயர் இடம்பெறவில்லை.

பெரும்பாலும் அமெரிக்க அரசமைப்பு முறையையே கபீலா பின்பற்றிவருவதால் அவரது அரசில் பிரதமர் பதவி இருக்கமாட்டாது என்றும்—

பதிலாக துணை அதிபர் ஒருவர் நியமிக்கப்படலாம். அவர் ஷிஸிகேடியாக இருக்கலாம் என்று தற்போது எதிர் பார்க்கப்படுகிறது.

கபீலாவின் புதிய அமைச்சரவையில் பிரதமர் பதவியும், பாதுகாப்புத்துறையும் வெற்றிடங்களாக உள்ளன.

## முபுட்டுவின் சொத்துக்களை முடக்க பிரான்ஸ் தயார்

பாரிஸ், மே 25

நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் ஸயர் அதிபர் முபுட்டுவின் சொத்துக்களை முடக்கி வைக்கத் தயார் என்றும் ஆனால் மருத்துவ சிகிச்சைக்காக அவர் நாட்டுக்குள் அனுமதிக்கப்படலாம் என்றும் பிரான்ஸ் அரசு தெரிவித்துள்ளது.

சுவிஸ் அரசு செய்தது போன்று பிரான்ஸும் முபுட்டுவின் சொத்துக்களை முடக்குமா என்று பிரெஞ்சுப் பிரதமரிடம் கேட்கப்பட்டபோது "இயன்றவரை சட்ட வழிகளை மேற்கொள்வோம்" எனப் பதிலளித்தார் அவர்.

முன்னாள் அதிபர் முபுட்டுவுக்கு பிரெஞ்சு ரிவீராவில் ஓர் ஆடம்பர மாளிகையும், பாரிஸ் போயே அவெனியூவில் மிகவும் ஆடம்பரமான தங்குமிடமும் உள்ளன.

# ஈரான் அதிபர் தேர்தலில் ஹாத்தமி முன்னணியில்!

## அங்கு அரசியல் திருப்பம் வரும்?

தெஹ்ரான், மே 25

**ஈரானில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், முன்னதாக எண்ணப்பட்ட வாக்குகளின் அடிப்படையில், முன்னாள் கலாசார அமைச்சர் முகமது ஹாத்தமி முன்னணியில் திகழ்வதாக அறிவிக்கப்படுகிறது.**

**அதிபர் தேர்தலில் அவர் பெரு வெற்றியீட்டுவார் என மதிப்பிடப்பட்டுள்ளது.**

முன்னாள் கலாசார அமைச்சரும், தீவிர சீர்திருத்த வாதி எனக் கருதப்படுபவருமான ஹாத்தமிக்கும், ஈரானிய நிர்வாக அமைப்பின் சார்பு வேட்பாளரான சபாநாயகர் அலி அக்பர் நாத்திக் நூரிக்கும் இடையில் தேர்தலில் கடும் போட்டி நிலவுவது தெரிந்ததே.

முன்னதாக எண்ணப்பட்ட 90 லட்சம் வாக்குகளில் 65 லட்சம் வாக்குகளைப் பெற்று ஹாத்தமி முன்னணியில் திகழ்வதாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

30 ஆயிரத்துக்கும் அதிகமான சாவடிகளில் நேற்று முன்தினம் சுறுசுறுப்பாக வாக்களிப்பு நடைபெற்றது.

இளைஞர்கள், பெண்கள், புத்திஜீவிகள் எனப் பெரும்பாலானோர் ஹாத்தமியின் மிதவாத சீர்திருத்தக் கருத்துக்களை ஆதரிப்பதாக வாக்களித்த பின்னர் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால் பழைமையை விரும்பும் இஸ்லாமிய மத் தலைவர்களின் ஆதரவு அவருக்கு இல்லை.

ஆனால் அவரது பிரதான போட்டியாளரான சபாநாயகர் அலி அக்பர் நாத்திக் நூரி மதத் தலைவர்களின் தீவிர செல்வாக்குக்கு உட்பட்டவராவார்.

இந்தத் தேர்தலில் ஹாத்தமி வெற்றியீட்டினால் அது ஈரானிய அரசியலில் பல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் என அவதானிகள் கருதுகின்றனர்.

கடந்த 18 ஆண்டுகளுக்கு முன்னர் ஈரானில் இஸ்லாமியப் புரட்சி ஏற்பட்டதன் பின்னர் அதிபர் தேர்தலில் வேட்பாளர் மத்தியில் பலத்த போட்டி நிலவுவது இதுவே முதன் முறையாகும். (ஐ)

### உலக அரங்கில்

## 60 பேர் கைது

மியான்மரில் ஆங்சான் ஸூகியின் தேசிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் மியான்மர் இராணுவ அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இதுவரை சுமார் 60 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். (ஐ)

## யூதக் குடியிருப்பு பணி நிறுத்தம்

### இஸ்ரேல் தொலைக்காட்சி அறிவிப்பு

பலஸ்தீனியர்களுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடக்குவதற்காக கிழக்கு ஜெரூஸலேமில் யூதக் குடியிருப்புகளை அமைக்கும் கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாக இஸ்ரேலியத் தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை அப்பகுதியில் பலஸ்தீனியர்களுக்கான 400 வீடுகளை அமைக்கும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தது.

இஸ்ரேலியப் பிரதமர் நந்தனியாகு எதிர்வரும் செவ்வாயன்று எகிப்திய அதிபர் முபாரக்கை சந்தித்துப் பேச்சு நடத்தும்போது யூதக் குடியிருப்புக் கட்டுமானப்பணிக்கு அவரது ஆதரவைக் கோருவார் என்றும் இஸ்ரேலியத் தொலைக்காட்சி தெரிவித்தது.

### பொலீஸ் நிலையம் தாக்கப்பட்டதன் எதிரொலி

# மொறவெவ பகுதி கிராம வாசிகள் வெளியேறப்போவதாக அச்சுறுத்தல்

## அதையடுத்து அங்கு தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு. மே 25

தேசிய பாதுகாப்பு வழங்கப்படாவிடின் மொறவெவ கிராமத்தை விட்டு வெளியேறிவிடப் போவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்ததை அடுத்து அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டுள்ளன.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த இராணுவ, பொலீஸ் மற்றும் சிவில் உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் கடந்த வாரம் மொறவெவ பகுதிக்கு விஜயம் செய்து நிலைமையைப் பார்வையிட்டனர். அப்பகுதி மக்களைச் சந்தித்து உரையாடினர்.

அதன் பின்னர் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோள்களை அடுத்து மொறவெவ பகுதியில் பாதுகாப்புத் தீவிரமாக்கப்பட்டிருக்கிறது. சிறிய இராணுவ முகாம்கள் அங்கு அமைக்கப் பட்டுள்ளன.

திருமலை மாவட்டத்தில் திருமலை–அநுராதபுரம் வீதியில் அமைந்துள்ள மொறவெவ பொலீஸ் நிலையம் கடந்த 12 ஆம் திகதி அதிகாலை விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது தெரிந்ததே.

இத் தாக்குதலை அடுத்து அப்பகுதியில் வசித்த மக்கள் இடம் பெயர்ந்தனர். அவர்கள் தமது பாதுகாப்பு குறித்து பீதியடைந்துள்ளனர். (ஐ-10)

### கடந்த அரசின் காலத்தில்

## பொலீஸுக்கு ஆள்சேர்ப்பு: விசாரணை நடத்த உத்தரவு

கொழும்பு, மே 25

கடந்த அரசின் காலத்தில் பொலீஸ் சேவைக்கு ஆள் திரட்டுவது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

அண்மையில் நுவரெலியாவில் இரு தமிழ் றிசேர்வ் பொலீஸார் கைது செய்யப்பட்டதாகவும் —

அவர்களை விசாரணை செய்ததில் அவர்கள் முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தது தெரிய வந்துள்ளதாகவும்—

பொலீஸார் தெரிவித்தனர்.

இவ்விரு பொலீஸாரும் தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் வைத்து விசாரிக்கப்பட்டுவருவதாகவும் —

அந்த நேரத்தில் பொலீஸ் ஆள்திரட்டல் நடத்திய பொலீஸ் அதிகாரியின் வாக்கு மூலத்தைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுவதாகவும் —

பொலீஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான யாரும் பொலீஸில் ஊடுருவியுள்ளனரா என்பதை அறிய [illegible] நடத்துமாறு [illegible] தரவிடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (உ-150-3)

## செத்தல் மிளகாய் விலை குறைப்பு

கொழும்பு, மே 25

செத்தல் மிளகாயின் விலை ஒரு கிலோ 100 ரூபாவில் இருந்து 80 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மொத்த விற்பனைத் [illegible] ஜெயசேகர அறிவித்துள்ளார். (ஐ)

# ராணுவத்துக்கு மேலும் 5,000 பேர்!

## திங்கள் முதல் ஆள்சேர்ப்பு

இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காக இராணுவத்துக்கு மேலும் 5 ஆயிரம் பேர் அவசரமாகச் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர்.

இதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு, அநுராத. புரம், மாத்தறை, கண்டி, குருநாகல், இரத்தினபுரி, பொலன்னறுவை, அம்பாறை ஆகிய பகுதிகளில் நாளை திங்கட்கிழமை முதல் அடுத்த மாதம் 18 ஆம் திகதி வரை இராணுவத்துக்கு ஆள்சேர்ப்புதற்கான நேர்முகப் பரீட்சைகள் பிரதேச செயலகங்களில் நடைபெறும் என்று இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

### ★ தீர்வுத்திட்டம் பற்றிப் பேச

## தமிழ்க் கட்சிகளுக்கு பீரிஸ் அழைப்பு

அரசாங்கம் முன் வைத்துள்ள அரசியல் தீர்வுத் திட்டத்தின் முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு நடத்த தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கு நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் புதன்கிழமை மாலை 4 மணிக்கு இச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி, இ. தொ. கா., ஈ. பி. டி. பி, ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ், புளொட், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் கலந்துகொள்ளவுள்ளன. (ஐ)

## அதிபர் கூட்டம்

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம்நாளைதிங்கட்கிழமை காலை 10 மணிக்கு தென்மராட்சிக் கல்விக் கோட்ட அலுவலர் சி. கணேசன் தலைமையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்போடப்பட்டுள்ளது

**பரமகுரு**

**ஸ்ரீ முதலியப் பெருமான் தேவஸ்தானம்**

வட்டுத் தெற்கு, வட்டுக்கோட்டை

பரிபாலனசபையால் இன்று (25-05-97) நடத்தப் படவிருந்த அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 1997-07-10 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சிரமத்திற்கு வருந்துகின்றோம்,

நன்றி.

**பரிபாலனசபை.**

(47148)

## வர்த்தகப் பாட கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, மே 25

உடுவில் கல்விக்கோட்ட பாடசாலைகளில் க. பொ. த உயர்தர வகுப்புகளில் வர்த்தகமும் கணக்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இரண்டுநாள் சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

கிரயக்கணக்கீடும், முகாமைக்கணக்கீடும் பற்றி இக் கருத்தரங்கில் கருத்துரைகள் வழங்கப்படும். (ஐ-152)

## மனைப்பொருளியல் பயிற்சி 5 இடங்களில் நடைபெறும்

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவு மகளிர் கல்விஅபிவிருத்திதிட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்தும் மனைப் பொருளியல் அடிப்படைப் பயிற்சி நெறி எதிர்வரும் ஜூன் மாதம் தொடக்கம் போக்குவரத்து வசதியை முன்னிட்டு ஐந்து இடங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நீர்வேலி, சங்கானை, யாழ்ப்பாணம், கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய ஐந்து இடங்களில் தொடர்ந்து ஐந்து மாத காலம் இப் பயிற்சி நெறி இலவசமாக நடத்தப்படும்.

தையற் பயிற்சி, கோலப் பயிற்சி, தலை அலங்காரம், பூவேலை, ஐசிங், சிற்றுண்டி தயாரித்தல் ஆகிய பல்வேறு பயிற்சிகள் இதில் அடங்கும். பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். (ஐ-135)

## நினைவு வற்றவில்லை



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 16 | 25 |
| 10 | 05 |
| 1926 | 1996 |

### அமரர் சின்னையா கந்தையா

பரிவுடனும் பாசத்துடனும் எமை வளர்த்து
ஆளாக்கியே
எம்வாழ்வு வளம்பெற அயராது உழைத்துமே!
ஆனமட்டும் உன்வாழ்வில் — பாடுபட்டீர்!
ஆனாலும்,
காலனவன் செய்த வஞ்சனையாலெமை — நீர்
ஆறாத்துயரிலாழ்த்தி மீளாத்துயில் கொள்ள
விரைந்தனையோ!
ஆயிற்று ஆயிற்று ஓராண்டுதான் ஆயிற்று
— ஆனாலும்
ஆறவில்லை எங்கள் மனம் என்செய்வோம்
எம் தந்தையே?

பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சோதரர்.**

'கற்பகதரு'
ஆனைக்கோட்டை.

(47110)

## புகைத்தல் தடுப்பு தின சுவரொட்டி

வடமராட்சி, மே 25

சர்வதேச புகைத்தல், தடுப்புதினத்தை ஒட்டி யாழ். போரூட் நிறுவனம் சுவரொட்டிகளை வெளியிட்டுள்ளது.

புகைப்பதால் உண்டாகும் தீமைகள் குறித்து இச் சுவரொட்டியில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச புகைப் பொருள் தடுப்பு தினம் இம்மாதம் 31ஆம் திகதியாகும். (ஐ-173)

## உடுவில் கோட்ட மெய்வல்லுநர் போட்டி

வலிகாமம் தெற்கு, மே 25

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக்கல்லூரியில் உடுவில் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன. (ஐ-152)

## கல்விக் கண்காட்சி

யா/ இணுவில் மத்திய கல்லூரி

**காலம்: 28 - 05 - 97** புதன் காலை 9-00மணி முதல்
**29 - 05 - 97** வியாழன்மாலை 4-00 மணி வரை

**முதன்மை விருந்தினர்கள்**

1 ஆம் நாள்: கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள்
சிரேஷ்ட விரிவுரையாளர், (கல்வியியற்றுறை)
தலைவர் (நுண்கலைப் பீடம் - யாழ். பல்கலைக்கழகம்)

2 ஆம் நாள்: திரு. ஆ. வ. கணேசலிங்கம் அவர்கள்
(பி. க. ப., உடுவில்)

ஆரம்ப கல்வி, கணிதம், விஞ்ஞானம், சமூகவியல், விவசாயம், அழகியல் பாடங்கள் சம்பந்தமான குறிப்பிட்ட அலகுகள்.

அனைவரும் வருக! ஆதரவு தருக!!

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

இணுவில் மத்திய கல்லூரி,
24 - 05 - 97

(சி–777)

## நியூ லங்கா றேடர்ஸ்

## NEW LANKA TRADERS

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பொருள்கள் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

1. Rewinding Wire-All Sizes
றிவைண்டிங் வயர் எல்லா அளவுகளிலும்.
2. Refrigerator & Deep Freezer Spare Parts
குளிர்சாதனப் பெட்டிக்குரிய உதிரிப்பாகங்கள்.
3. Freon Gas R - 12, R - 22
குளிர்சாதனப் பெட்டிக்குரிய வாயு.

**222, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(47147)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 26 | 11 |
| 07 | 04 |
| 1936 | 1997 |

### திருமதி செல்லம் கணபதிப்பிள்ளை

(கைதடி கிழக்கு)

எங்கள் குடும்ப ஒளி விளக்கே அம்மா! எங்கள் வாழ்வு வளம் பெற உங்களை மெழுகாய் உருக்கி
வாழ்ந்த வாழ்வு
நீங்கள் செலுத்திய அணைகடந்த அன்பு
இடையில் ஏற்பட்ட உங்கள் எதிர்பாரா இழப்பு
எம்மால் என்றுமே மறக்க முடியாதவை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

எமது தெய்வத்தின் மறைவு கேட்டு எமது துயரில் பங்கு கொண்டு உதவி புரிந்த, அனுதாபச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

இன்று 25 – 05 - 97 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். வீட்டுக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**K. S. கணபதிப்பிள்ளை**
**குடும்பத்தினர்.**

"செல்வபதி"
கைதடி கிழக்கு,
கைதடி.

(47120)

## 50 ஆண்டுசேவை பூர்த்தி பெருவிழா

யாழ்ப்பாணம், மே 25

காரைநகர் மணற்காடு கும்ப நாயகி முத்துமாரி அம்பாள் கோயில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்களின் 50 ஆவது ஆண்டு சேவை நலன் பூர்த்திப் பெருவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

விழாக் குழுத் தலைவர் வை. கா. தவராசன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

நல்லை ஆதீன முதல்வர் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞான சம்பந்தபரமாச்சாரிய சுவாமிகளும், நயினை நாகபூசணி அம்பாள் ஆலய ஆதீனகுரு சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்களும் ஆசியுரை வழங்குவர்.

ஈ. பி. டி. பி யின் தீவக உதவி அரசியல் பொறுப்பாளர் ந. லோகன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்கஅதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், வேலணை உதவி அரசாங்க அதிபர்கே. கே. சந்திரன், உடுவில் உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம், வலயம்-1 பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன், இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

விழா நாயகரை கௌரவிக்கும் வைபவமும் இடம் பெறும். (ஐ-111)

## கட்டடம் வீழ்ந்தது

தென்மராட்சி, மே 25

கடும் காற்றினால் தென் [illegible] யாலய வகுப்பறைக் கட்டடம் ஒன்று வீழ்ந்தது. (அ-175)

## விற்பனையாகிறது

- ★ புதிய கணிதப் பயிற்சி (விடைகளுடன்) ஆண்டு 6
- ★ புதிய கணிதப் பயிற்சி (விடைகளுடன்) ஆண்டு 7
- ★ புதிய கணிதப் பயிற்சி (விடைகளுடன்) ஆண்டு 8
- ★ புதிய கணிதப் பயிற்சி (விடைகளுடன்) ஆண்டு 9
- ★ ஆண்டு 9 கணிதம் 1 & 11 மாதிரி பரீட்சை வினாத்தாள் (15) விடைகளுடன்
- ★ ஆண்டு 10 கணிதம் 1 & 11 மாதிரி பரீட்சை வினாத்தாள்கள் 15 விடைகளுடன்
- ★ G.C.E. (O/L)கணிதம் 1 & 11 முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்கள் 15 விடைகளுடன்

ஆக்கியோன்:
**திருமதி ச. ம. கயிலைநாதன்**
B. A. (English) & Maths Trained

யாழ்ப்பாணத்தில் மகிமிலன் புத்தகசாலையிலும் இலங்கையிலுள்ள சகல முன்னணி புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

தொடர்புகளுக்கு:
30, 3/3, Galpotha Street
Kotahena, Colombo - 13,
T. Phone No. 448912.

(47083)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பிள்ளைகள் எம்மிடம் வந்துசேர

# நீதியின் பேரால் உடன் நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதிக்குப் பெற்றோர் மகஜர்

யாழ்ப்பாணம், மே 25

''இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட எமது பிள்ளைகள் மீது மனிதாபிமான ரீதியின் பெயரிலும் நீதியின் பேரிலும் நடவடிக்கை எடுங்கள்.''

கைதானோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் இவ்வாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் மகஜர் ஒன்றை அனுப்பியது.

அந்த மகஜரின் சாராம்சம் வருமாறு:-

எங்களுடைய அன்புக்குரிய பிள்ளைகள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது பற்றிக்கூட இதுவரை எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை. கைதானவர்களின் பெயர்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவுமில்லை. இதனால் நாம் மிகுந்த மன உளைச்சலுடன் இந்த விடயத்தைத் தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகின்றோம். எங்கள் பிள்ளைகள் என்ன மனநிலையில் இருக்கிறார்கள் என்பது பற்றி எங்களுக்கு எதுவுமே தெரியாது.

கைதான எமது பிள்ளைகள் பற்றி எவ்வித தகவலும் இல்லாத நிலையில் நாம் எவ்வளவு அந்தரித்த நிலையில் வாழ்கின்றோம் என்பது பற்றி இரு பிள்ளைகளின் தாய் என்ற வகையில் நீங்கள் நன்கு உணர்வீர்கள் என்று நம்புகின்றோம்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களில் பாடசாலை மாணவர்கள், அரசாங்க-தனியார் பணியாளர்கள் என்று பல வகையினரும் அடங்குவர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் சுமார் 800 பெற்றோர்கள் உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது வாழ்க்கை அர்த்தமற்றதாகி விட்டது; அவர்களுடைய வாழ்க்கைக் காலமும் குறைக்கப்பட்டுவிட்டது.

ஆகக்குறைந்தது எங்கள் பிள்ளைகள் எங்களுடன் (பெற்றோருடன்) கடிதம் மூலமாக தொடர்பு கொள்வதற்கேனும்அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். அது ஓரளவேனும் எங்களுக்கு நிவாரணத்தைத் தரும்.

உங்கள் மீதும் இலங்கை ராணுவத்தினர் மீதும் வைத்த நம்பிக்கையின் பேரிலேயேபல தரப்புக்களில் இருந்தும் வந்த எச்சரிக்கைகள் மத்தியிலும், ஆலோசனைகள் மத்தியிலும் நாம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தொடர்ந்து வாழ விரும்பினோம். ஆனால் எங்கள் வாழ்க்கை என்றுமே எதிர்பாராத வகையில் அவலங்களையும், துன்பங்களையும் அனுபவிக்க நேர்ந்துள்ளது. எங்களிடமிருந்து பிரிக்கப்பட்ட பிள்ளைகள் மீண்டும் எம்முடன் வந்து சேர்வதற்கு உதவுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழர் என்ற வகையில் இந்த அரசாங்கம் எங்களுக்கு நன்மை செய்யும் என்று நம்பியும், கருதியும் அதற்கு எங்களாலான சகலஒத்துழைப்புக்களையும் வழங்கினோம். உலகத்திலுள்ள ஏனைய பிள்ளைகள் மகிழ்ச்சியாக வாழ்வது போல எங்கள் பிள்ளைகளும் எங்களுடன் வாழ உங்களாலான நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

எல்லாப் பிள்ளைகளும் இறைவனின் பிள்ளைகளே என்று ஒரு தாய் கருதுவது போல மனிதாபிமான ரீதியிலும் நீதியின் பேரிலும் இதனை உங்களால் செய்ய முடியும் என்று நம்புகின்றோம்.

எங்கள் பிள்ளைகள் தமது பாடசாலை நாள்களிலும், பணிபுரிந்த நாள்களிலும் இலங்கை இராணுவத்தினரால் அவர்களின் தடைமுகாங்களிலேயே எங்களின் கண்முன்னாலேயே கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் வெளிநாடு செல்லவுமில்லை, விடுதலைப் புலிகளுடன் சேரவும் இல்லை— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட இந்த மகஜரின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சு, 51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல, 515 பிரிகேட்டின் பிரிகேடியர் செனிவிரட்ண, காங்கேசன்துறை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா, ஜோசப் பரராஜசிங்கம், யாழ். அரச அதிபர், குமார் பொன்னம்பலம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வதிவிடப் பிரதிநிதி, மற்றும் யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-5)

## சமய சந்திகளில்

கொழும்புத்துறை, மே 25

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயிலில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நாடு நலம் பெற, மக்கள் மனநிம்மதியுடன் வாழ இறை ஆசி வேண்டி நண்பகல் 11-30 மணி தொடக்கம் 1-30மணிவரை பஜனை, கூட்டுப்பிரார்த்தனை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 25

தொல்புரம் கிழக்கு ஸ்ரீபூதராசி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும்: எதிர் வரும் புதன்கிழமை காலை விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் உற்சவம் நிறைவு பெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 25

மல்லாகம் ஸ்ரீபெரியதம்பிரான் ஆலய வருடாந்த பெரும்பொங்கல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும். 10 மணிக்கு விசேட அபிஷேகத்தை அடுத்துப் பூசை, வழிபாடு ஆராதனைகள் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 25

கோப்பாய் தெற்கு ஸ்ரீகற்பகப் பிள்ளையார் கோயிலின் நவோத்திர சகஸ்திர (1008) மகா சங்காபிஷேகமும் மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 25

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீபரமேஸ்வரன் ஆலய மகா கும்பாபிஷேக தினவிழா எதிர் வரும் செவ்வாய்க்கிழமை காலை 7மணி முதல் நடைபெறும்.

அன்றைய தினம் கலை 7 மணிக்கு நவோத்தர ஸஹஸ்ர சங்காபிஷேகமும் பிற்பகல் 2 மணிக்கு திருக்கல்யாணமும், மாலை 4. 30 மணிக்கு சுவாமி வெளிவீதி உலா வருதலும் விசேட மேளக்கச்சேரியுடன் இடம் பெறும். (ஐ-4)

# கந்தபுராணத்தை மாணவர்கள் இலகுவில் அறிய உதவும் சிறந்த நூல்

கந்தபுராணத்தில் இடம் பெறும் சிறந்த கருத்துக்கள் சிலவற்றை எடுத்துக் கூறும் 'கந்தபுராணச் சிந்தனைகள்' என்னும் இந் நூலில் தவத்தின் பெருமை, தவஞ் செய்த சூரபன்மன், சந்திர சாபம், தக்க யாகம், சிவன் யோகத்தில் இருந்தார், திருக்கயிலாயத்திற் சூது, அகந்தை கொண்ட வீரவாகு, அன்பு செய்த அகத்தியர், பிரமோபதேசம், திருக்கைவேல் என்னும் பத்துக்கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

இலகு தமிழில் எழுதப்பட்டிருக்கும் இக்கட்டுரைகளிற் கூறப்பட்டிருக்கும் கதைகளைப் பாடசாலைப் பிள்ளைகளும் படித்துச் சுவைக்க முடியும். கட்டுரைகளிற் கூறப்படும் கருத்துக்கள் கற்றோர் சிந்தனைக்கு விருந்தாகும்.

'தவஞ்செய்த சூரபன்மன்' என்னுங் கட்டுரையில் 'தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்' என்னும் பகுதிக்கு நூலாசிரியர் கூறும் பொருளும், ஏன் அவ்வாறு பொருள் கூறவேண்டுமென்பதற்கு அவர் தரும் விளக்கமும் கந்தபுராண உரையாசிரியர்களின் சிந்தனைக்குரியனவாகும்.

'பிரமோபதேசம்' என்னும் கட்டுரையில் பிரமா தனது மகன் தக்கனுக்கு உபதேசித்ததாகக் கந்தபுராணத்தில் கூறப்படும் கருத்துக்கள் அத்தனையும் சுருக்கித் தரப்பட்டிருக்கின்றன.

### நூல்வரிசை

இவ்வாறே ஒவ்வொரு கட்டுரையும் ஏதோ ஒருவகையிற் சிறந்து விளங்குகிறது.

''திருக்கைவேல்'' என்னும் கட்டுரையின் இறுதிப் பகுதி சற்றே விரிவாக எழுதப்பட்டிருப்பதால் அது மேலுஞ் சிறப்பாக அமைந்திருக்கும்.

வள்ளி தெய்வயானை சமேதராக வீற்றிருக்கும் முருகப் பெருமானின் அழகிய அட்டைப்படத்தோடு வெளிவந்திருக்கிறது இந்நூல்.

நூல்: கந்தபுராணச் சிந்தனைகள்
ஆசிரியர்: மட்டுவில் ஆ. நடராசா

''இந்நூலின்பயனுணர்ந்து அனைவரும் வாங்கிக் கற்று உய்வடையவேண்டும்'' என இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய ''சிவத்தமிழ்ச் செல்வி'' தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் கூறியிருப்பதையே இந்நூலை ஆய்வு செய்வோர் எவரும் ஏற்றுக் கொள்வர் என்பதில் ஐயமில்லை.

— க. சிவசங்கரநாதன்

# பணிவாழ்க்கையின் வழிகாட்டியாக வாழ்ந்த அருட்தந்தை ஜெபநேசன்

பணி வாழ்க்கையின் வழிகாட்டியாக வாழ்ந்த அமரர் அருட்தந்தை எஸ்.எச்.ஜெபநேசன் அடிகளாரின் சேவையை நினைவு கூருவது எமது கடமையாகும்.

01 - 09 - 1962 இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட அவர் பல பங்குகளில் பணிபுரிந்து 01 - 09 - 83 தொடக்கம் யாழ். பேராலயப் பங்கில் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். பத்து ஆண்டுகளுக்கு மேலாக அவர் சேவையாற்றிய காலம் யாழ். மறை மாவட்டத்திற்குச் சோதனையும், வேதனையும் நிறைந்த இருண்ட காலம். ஆனால் இக்காலத்தில் இவர் ஆற்றிய தன்னலமற்ற சேவைகள் சொல்லில் அடங்கா. இறைசித்தத்தை ஏற்று பணி வாழ்க்கையை மேற்கொண்ட இவர் இதற்கு எடுத்துக்காட்டாகவும் மக்களின் அன்றைய துயர் நிறைந்த வாழ்க்கைச் சக்கரத்தில் துயர் துடைக்கும் கிறிஸ்துவின்பிரதிநிதியாகவும் சேவையாற்றினார். தன்னுயிரைத் துச்சமென மதித்து மக்களின் துயர்துடைக்கும் பணியில் துன்பத்தையும் சவால்களையும் தானே ஏற்று அவர் சேவையாற்றிய சந்தர்ப்பங்கள் பல. வாழ்க்கையில் விரக்தியுற்றோர், வாழ வழியற்றோர், வாழ்வே சூனியமாகி நடைப்பிணமாய்த் திரிந்தோர் அனைவரையும் அன்புடன் அணுகி தன் அறிவுரையாலும் வழிகாட்டலாலும் வாழ வைத்துள்ளார்.

எமது பேராலயத்தில் அனைவரையும் ஒன்றிணைத்து புரிந்துணர்வை ஏற்படுத்தி நிர்வாகத்தைத் திறம்பட நடத்திவந்தவர் அவர். இளைஞர் உருவாக்கல் இயக்கம் பாடகர் குழாம், பீடப்பணியாளர் சபை அனைத்திற்கும் தந்தையாகவும் நல்லாயனாகவும் இருந்து கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ வழிகாட்டினார். நோயுற்ற வேளையிலும் பங்குப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்ற ஆலோசனை வழங்கி அப்பணிகள் சிறப்புற நிறைவு பெற வழிவகுத்தவர்.

### நீத்தார் நயப்புரை

இத்தகைய ஆற்றல் கொண்ட எம் அருட்தந்தை எம்மை விட்டுப் பிரிந்தது எமக்கும் எம்மறை மாவட்டத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

'ஹியுடெக்' போன்ற பல சமூக நல அமைப்புகளூடாக அவர் முழுமையான சமூகப் பணியையும் ஆற்றியவர் அருட்தந்தை ஜெபநேசன் அடிகளார். கிறிஸ்துவின் வழி நின்று நலிந்த மக்களுக்குக் கைகொடுத்து உயர்த்தி அவர்களுக்கு வாழ்வளித்தார்.

தமது அளப்பரிய, அர்ப்பணிப்புச் சேவையின் மூலம் மக்களில்இறைவனைக் கண்டு மகிழ்ந்தவர் அடிகளார்.

இறைவனின் சித்தப்படி பணிவாழ்வை மேற்கொண்ட எம் அருட்தந்தை, எம் விசுவாசத்தின் படி நித்திய வாழ்வுக்குள் பிரவேசிக்க இறைவன் அழைத்துள்ளார்;

''மகிழ்ச்சியுடன் இறைவனுக்கு ஊழியம் செய்தார். பெருமகிழ்ச்சியுடன் அவர் [illegible]''

— [illegible]

# சைவநெறித் தேர்வு நவம்பரில் நடக்கும்

வலிகாமம் தெற்கு மே-25

யாழ். சைவ பரிபாலன சபையினரால் ஆண்டு தோறும் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்டுவரும் சைவநெறித் தேர்வுப் பரீட்சை இவ்வருடம் எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் எனத் தேர்வுச் செயலாளர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார்.

குடாநாட்டில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் இத்தேர்வில் கலந்துகொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் 125, அரசடி வீதி, கந்தர்மடத்தில் உள்ள சைவ பரிபாலனசபை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அவர் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (ஐ-152)

# செம்பியன்பற்று - மந்திகை மினி பஸ் சேவை நிறுத்தம்

வடமராட்சி, மே 25

செம்பியன்பற்று — மந்திகை மினிபஸ் சேவை கடந்த திங்கட்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் வடமராட்சி கிழக்குப் பிரிவிலுள்ள பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பெறவும், தமக்குரிய அத்தியாவசியப் பொருள்களைப் பெறவும் மந்திகைக்கும், ஏனைய அலுவல்களுக்காக பருத்தித்துறைக்கும் வந்து செல்ல முடியாது கஷ்டப்படுகின்றனர். (ஐ-173)

## புளொட் குழு சந்திப்பு

தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து புளொட் அமைப்பின் தூதுக்குழு ஒன்று நேற்று முன் தினம் காலை எதிர்க்கட்சித் தலைவர் ரணிலைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தூர் மேற்கு சுன்னாகம் வீதியில் வீடுகட்டுவதற்கும், பயிர் செய்வதற்கும் ஏற்ற 7 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ம. சத்தியபாலன், மயிலணி, சுன்னாகம். (47143)

நல்ல நிலையில் உள்ள 'வோக்ஸ் வேகன்' (VOLKES WAGON) கார் 5 சிறி 4033 விற்பனைக்கு உண்டு. த. பொன்னம்பலம், 68, பழம் வீதி, வண்ணார் பண்ணை வட மேற்கு. (47125)

### வீடு விற்பனைக்கு

நல்லூர் கந்தசாமிகோயில், யாழ் மாநகரசபை, கல்விக் கந்தோர், யாழ் அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள நல்ல குடிதண்ணீர், பலன் தரும் மரங்கள், மின்சாரம் ஆகிய வசதிகளுடன் விசாலமான அறைகள் உடைய கவர்ச்சிகரமான வீடு உடன் விற்பனைக்குண்டு. இ இரத்தினதுரை 29, நாயன்மார் வீதி, நல்லூர். [47056]

நல்லூர் நாயன்மார் வீதி, 33 ஆம் இலக்க வீடு, மூன்று பரப்புக் காணியுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இ. இரத்தினதுரை 29, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (47057)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [47138]

### தவறிவிட்டது

சிவஞானசுந்தரம் சிவகாமி என்பவரது விசேட பாடசாலை அடையாள அட்டை மானிப்பாய் மெமோரியல் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் ஒப்படைக்கவும். [47135]

இர. சரத்தினம்சாரதாமணி தேவி 14 சூரிய வீதி, நீர்கொழும்பு எனும் விலாசம் உடைய இல 388580771V என்ற தேசிய அடையாள அட்டை கடந்த 09-05-97 அன்று நெல்லேண்டை அம்மன் கோயிலுக்கும், மெத்தக்கடைச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் கவிதா பத்திரிகை விற்பனை நிலையம். பருத்தித்துறை. [47127]

இராசரத்தினம் ஜயாளினி இல 677620390V தேசிய அடையாள அட்டை 9-5-97 அன்று நெல்லெண்டை அம்மன் கோயிலுக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், கவிதா பத்திரிகை நிலையம், பருத்தித்துறை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் [47128]

செல்லத்துரை கருணேஸ்வரி ஆகிய எனது 658443453V இலக்க அடையாள அட்டை மடடுவில் துர்க்கையம்மன் கோயில் பகுதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கோயில் தர்மகர்த்தாவிடம் ஒப்படைக்கவும். [47151]

## கௌரவிப்பு

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீசிவ சுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த உற்சவகால பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ சு. முரளிதரக்குருக்கள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆலய மகா சங்காபிஷேக தினத்தன்று சங்காபிஷேக சபையினரால் பொன்னாடை போர்த்திப் பட்டம் அளித்துச் சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டார்.

(ஐ-30)

### வாடகைக்கு

யாழ். நகரில் கடையும், அறையும், தனித்தனியாக வாடகைக்குண்டு. தொடர்பு: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (47139)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

சிறுதொகைப் பணம் நவீன சந்தைப்பகுதியில் என்வலப்புடன் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி லிங்கம், பட்டு அகம். (இல.18) யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். [47131]

### காணி விற்பனைக்கு

கட்டிய குறையுடன் வீடு உட்பட கிணறு, மலசலகூடம் என்பவற்றைக் கொண்ட 1½ பரப்பு காணி, நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு மிக அண்மையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 616 மே/பா 'உதயன்' யாழ்ப்பாணம். [47096]

வெளிவந்துள்ளது!

## கணிதம் ஆண்டு 5

1997 முதல் ஆண்டு 5-க்கு உரிய கணித பாடத்திட்டத்துக்கு தேசிய கல்வி நிறுவக ஆரம்பக் கல்வித் துறையின் வழிகாட்டிக்கு அமைவானது.

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.**

(47107)

## தேவை

மின்சார உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் விற்பனையாளராகப் பணியாற்றுவதற்கு-

1. கணக்கு, ஆங்கில அறிவுள்ள பெண்கள்
2. விற்பனையாளர் (ஆண்கள்)

30. 5. 97-க்கு முன் விண்ணப்பிக்கவும்.


இல. 621
C/o உதயன்
யாழ்ப்பாணம்
(47149)

## தேவை

நகரை அண்டிய பகுதியில் உள்ள மருந்தகத்துக்கு அனுபவமுள்ள பணியாள் தேவை. தகுதியுடையோர் தங்களுக்கு உள்ள அனுபவம் முதலிய விவரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

**விளம்பர இல. 620**
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.
(47146)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



### அமரர் சங்கரப்பிள்ளை நாகலிங்கம்

(காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன இயந்திரப் பராமரிப்புப் பகுதி முன்னாள் ஊழியர்.)

தோற்றம்: **03 – 02 1925**
மறைவு: **25 – 04 – 1997**

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய் எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து, எமது இல்லத்தில் உமது பாசத்தினை இருப்பிடமாய் அமர்த்திவிட்டு எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்த விளக்கே! எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் உம் நினைவலைகள் எங்களை விட்டு என்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல சிறி ஞான நரசிம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இன்று 25-05-1997இல் நடைபெறும் அன்னாரின் சபிண்டீ கரணக் கிரியைகளில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி: இராசமணி
பிள்ளைகள்: ரவி, ரமேஸ்.

7 ஆம் கட்டை,
மல்லாகம்.
(47118)

## 45 ஆம் நாள் நீங்கா நினைவலைகள்! ..,



செல்வன்

### ஜனனன் இரத்தினகோபால் (சிவபாலன்)

(யாழ்/ வைத்தீஸ்வராக்கல்லூரி, 7 ஆம் ஆண்டு மாணவன்)

மலர்வு: **17–07–1985**
உதிர்வு: **12–04–1997**

அன்புச் செல்வனே! அருமை மைந்தனே!
கண்மூடித்திறப்பதற்குள்
காலன் உன்னைக் கவர்ந்ததென்ன?
அம்மா, அப்பா கதறி அழ உன் அன்புச் சகோதரர்கள்
அண்ணா! அண்ணா! எனத் துடிக்க, நீ மறைந்த
மாயம் என்ன?
பாடசாலை நேரத்தில் ஒரு நிமிடம் போனாலும்
நேரம் போய்விட்டது என்று அவசரமாய் ஓடிடுவாய்
பன்னிரண்டு வயதினிலே நீ இறைவனடி சேர்வதற்கும்
காலனும் உனை அவசரமாய்க் கொண்டு சென்றான்.
விளையாட்டில் வீரனாய் வீறு கொண்ட
நடைபோட்டு
வெற்றிப் பீடத்தில் நீ ஏறி நிற்கையிலே,
இவன் தான் என் மகன் என்று சொல்லிப் பூரித்தேன்
என் மகன் இவன் என்று இனி நான் சொல்வதற்கு
என் பிள்ளை இங்கில்லை என்பதை நினைக்கையிலே,
பெற்ற வயிறு இங்கு பற்றி எரியுதடா!
மூத்த புதல்வனாய் உனை நாம் பெற்று,
மகிழ்ந்திருந்த வேளையிலே,
முதலிலே உனைப் பறி கொடுத்துத் தவிப்பதற்கு,
என்ன பாவம் நாம் செய்தோம் — மகனே!
எம் கடமை நீ செய்வாய் என்று நாம்
நினைத்திருந்தோம்
உனக்கு எம்மை கடமை செய்ய வைத்த விதியை
நாம் என்ன செய்வோம்?
உயிரோடு உன்னை எடுத்தணைக்க முடியாமல்
படமாக உனைப்பார்த்து பரிதவிக்கும் இப்பாவிகளை
பார்க்க நீ இங்கில்லை — மகனே!
உன் தம்பி கேசவனும் நீ இன்றித் தவிக்கின்றான்
அவனின்றி நீயில்லை நீயின்றி அவனில்லை
எப்பொழுதும் இருவரும் ஒன்றாகத் திரிந்தீர்கள்
அண்ணனாய் தோழனாய் அவனுடன் அன்பாக உலா
வருவாய்
உன்னைப் போல் அண்ணனை உன் தம்பி கேசவனும்
தங்கைமார் ஜனனி, அபியும் என்றுதான்
காண்பார்களோ!
தேற்றுவார் யாரும் இல்லை! திரண்டெழுந்து
துடிதுடிக்க
நம் உறவினர்கள் அருகில் இல்லை.
தனிமையிலே நாம் இங்கு கதறுகின்றோம்;
எல்லாம் வல்ல முருகப் பெருமானின் திருவடியின் கீழ்
உன் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றி சகல விதத்திலும் உதவிகள் புரிந்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

என்றும் கண்ணீர்ப்பூக்களை,
காணிக்கையாக்கும்:-

உன் அன்பான அப்பா, அம்மா,
தம்பி, தங்கைமார், அம்மம்மா, சின்னம்மா,
ஆசை அம்மா, அன்ரி, பெரியம்மா, பெரியப்பா,
அத்தைமார், மாமாமார், அக்காமார், அண்ணாமார்,
மச்சான்மார் மச்சாள்மார், பிறவுண் வீதி,
பெரியம்மா குடும்பம், தேவி அன்ரி குடும்பம்,
பரஞ்சோதி மாமாகுடும்பம், சிவஞானம் மாமா குடும்பம்,

நிரந்தர முகவரி:
சுருவில்,
ஊர்காவற்றுறை.
தற்காலிக முகவரி:
99/6, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(47122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மணலாறு

வெலிஓயா என்று பெயர் மாற்றப்பட்ட மணலாறு, திடீரென அநுராதபுரம் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது. எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, பரபரப்புக் காட்டாமல் வெகு இரகசியமாக வைக்கப்பட்டுத் திடீரென்று அறிவிப்பு வந்திருக்கிறது.

அரசின் இந்த அறிவிப்பும், செயற்பாடும் தமிழ் மக்களுக்கு பேரிடியாக வந்துள்ளன.

வடக்கு - கிழக்குப் பிரதேசம் தமிழர்களின் தாயகப் பூமி என்ற சரித்திர உண்மையை கொழும்பு அரசாங்கங்கள் சீரணிக்கும் நிலையில் இருந்ததில்லை. அவ்வாறு தமிழர்கள் உரிமை கொண்டாட இடங்கொடுக்கக் கூடாது என்ற எண்ணமே அந்த அரசுகளிடம் மேலிட்டு நின்றது.

அதனாலேயே, வடக்கு-கிழக்கில், பரவலாக, திட்டமிட்ட குடியேற்றங்கள் நடத்தப்பட்டு, பல தமிழ்ப்பகுதிகளின் பெயர்கள் மாற்றப்பட்டு, அவை கபளீகரம் செய்யப்பட்டன.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த நாளில் இருந்து இது ஒரு கொடிய நோயாக, தீராத வியாதியாகத் தொற்றிக் கொண்டே வருகிறது.

வடக்கு-கிழக்கை தொடர் நிலப்பரப்பாக்கும் மையப் பகுதி மணலாறு. அதனால் மணலாறு மீது அரசுகள் நீண்ட காலமாகவே கண் வைத்திருந்தன. தமிழ் மாவட்ட நிர்வாகப் பரப்பிலிருந்து அதனைப் பிய்த்தெடுத்து சிங்கள நிர்வாகப் பரப்புக்குள் கொண்டு வந்தால் வடக்கு - கிழக்கைத் துண்டாடியதாகிவிடும். அந்தத் துண்டாடலை இந்த அரசு மிகக் கெட்டித்தனமாகச் செய்து முடித்துள்ளது; கச்சிதமாகக் காரியத்தை முடித்திருக்கிறது!

தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கும் பொருட்டு அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தைக் கொண்டு வரப் போவதாக அரசு அடிக்கடி உறுதி அளித்து வருகிறது. உத்தேச அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தில் மாகாணங்களின் எல்லைகளை மாற்றிப் பிராந்திய சபைகள் தோற்றுவிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

அவ்வாறிருக்கையில், திடுதிடுப்பென மணலாறை அநுராதபுரத்துடன் அவசர அவசரமாக இணைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது? ஏனோ?

வடக்கு - கிழக்கைப் பிரிப்பதா, இப்போதுள்ளது போலவே விடுவதா என்பது குறித்து அரசியல் களத்தில் முரணான நிலைப்பாடுகள் முட்டி மோதுகின்றன-

அதுபற்றி முடிவு செய்வதற்கு முன்னரே, வடக்கையும் கிழக்கையும் நிர்வாக ரீதியாகத் துண்டாடி விட்டால் பிரிப்பு — இணைப்பு விவகாரத்துக்கு முடிவு கட்டி விடலாம் என்று அரசு நினைத்து விட்டதா?

மணலாறை அநுராதபுரத்துடன் இணைத்தமை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற விவகாரத்தைக் கொட்டிக் குழப்பும் செயலாகவே அமையும்.

இந்த நடவடிக்கை, அரசின் மீதும், அதன் தீர்வு முயற்சி மேலும் தமிழர்களை அவநம்பிக்கை கொள்ளச் செய்யும், அவசியமற்ற வேண்டத்தகாத செயலாகும். அரசு தனது இந்த முடிவை மீள்பரிசீலனை செய்து நீதியை நிலைநாட்ட வேண்டும்.

# சந்திரிகாவையும் ரணிலையும் கூட்டணிக் குழு சந்திக்கும்

திருகோணமலை, மே 25

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக் குழு ஒன்று இவ்வாரம் ஜனாதிபதியையும், எதிர்க்கட்சித் தலைவரையும் தனித்தனியே சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளது. அத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் அஷ்ரப், நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் ஆகியோரையும் கூட்டணித் தூதுக்குழு தனித்தனியாகச் சந்திக்கும்.

அரசின் அதிகாரப் பரவலாக்கல் திட்டம் தொடர்பாக இதுவரை நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளிலும் பார்க்க இவ்வாரம் நடக்க விருக்கும் பேச்சுக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கும் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் அஷ்ரப்புடனான சந்திப்பு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும்—

பேராசிரியர் பீரிஸுடனான சந்திப்பு மறு நாள் புதன்கிழமையும்—

ஜனாதிபதியுடனான சந்திப்பு எதிர்வரும் வியாழக்கிழமையும்—

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தில் முக்கியத்துவம் மிக்க நிர்வாக அலகு தொடர்பாக ஸ்ரீலங்கா மூஸ்லிம் காங்கிரஸுடன் பேசி இணக்கம் ஒன்றுக்கு வருமாறு அரசு ஏற்கனவே எமக்குக் கூறியிருந்தது. அது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்தியுள்ளோம். ஜனாதிபதியைச் சந்திக்கும் போது அதன் பெறுபேறு பற்றி அவரிடம் தெரிவிப்போம் என்று கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-150)

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## திருமலையில் ஜி. சீ. ஈ. பெறுபேறுகள்

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையின் திருமலை மாவட்டப் பெறுபேறுகள் நேற்றுப் பிற்பகல் அங்கு வெளியாகின. (இ-ஐ-150)

## ஒத்திவைப்பு

சாவகச்சேரி, மே 25

நாளை திங்கள் நடைபெறவிருந்த கவிதை, கட்டுரை, ஆக்கம், சிறுகதை ஆகியவற்றை உள்ளடக்கிய தமிழ் மொழித்தினப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலர் இ. கணேசன் தெரிவித்துள்ளார். (ஐ-31)

# கொழும்பில் படையினர் தேடுதல்: 200க்கு மேற்பட்டோர் கைது

திருகோணமலை, மே 25

தலைநகர் கொழும்புக்குள் தற்கொலைப் படையினர் ஊடுருவியிருப்பதாகக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் படையினரும் பொலீஸாரும் கூட்டாகத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை வரை 200-க்கு மேற்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். தேடுதல் வேட்டை தொடர்வதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை—

மன்னாரில் இருந்து கொழும்புக்கு வந்த தமிழ்ப் பெண் ஒருவரை சந்தேகத்தின் பேரில் பொலீஸார் கைது செய்துள்ளனர். இவருடன் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் கொழும்பு வந்துள்ளனரா என்பது குறித்து பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (இ-ஐ-150)

## குடும்பஸ்தர் பலி

சுட்டுக்கொல்லப்பட்டதாக, குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சரசாலை மத்தியைச் சேர்ந்த, நான்கு பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் குமாரசூரியர் (சுரேஷ் — வயது 42) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினமிரவு 9 மணிக்கு இனந்தெரியாத மூவரால் அழைத்துச் செல்லப்பட்ட அவர் இரவு வீடு திரும்பவில்லை எனவும் —

விடிந்த பின் தேடியபோது மட்டுவில்கமலாசனி வித்தியாசாலை முன்பாக வீதியில் சடலமாகக் காணப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கையில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர கிளின்ரன் நிர்வாகம் உதவவேண்டும்

### அமெரிக்கப் பத்திரிகை வலியுறுத்து

இலங்கையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச உதவியுடனான மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க கிளின்ரன் நிர்வாகம் தீவிரமாக உதவ வேண்டும்.

அமெரிக்காவில் வெளியாகும் ''பொஸ்ரன் குளோப்'' பத்திரிகையில் கடந்த மே 12 ஆம் திகதி வெளியான ஆசிரிய தலையங்கத்தில் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

'பொஸ்ரன் குளோப்' பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தின் சில பகுதிகளை நேற்றைய 'த ஐலண்ட்' நாளிதழ் தனது ஆசிரிய தலையங்கத்தின் இடையே மறு பிரசுரம் செய்துள்ளது.

அதில் தெரிவித்திருப்பதாவது:-

பொஸ்னியா, செச்னியா, றுவாண்டா ஆகிய நாடுகளில் இடம் பெற்றது போன்ற இனரீதியான யுத்தமே இலங்கையிலும் நடைபெறுகிறது.

தற்போதைய யுத்தத்தை யார் தொடங்கினார்கள் என்பதை விட பொது மக்களுக்கு அங்கு கற்பனை செய்து பார்க்க முடியாத அளவு பயங்கரங்கள் விளைவிக்கப்படுகின்றன என்பதே கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

சுமார் 5 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்து அல்லற்படுகின்றனர். இன்னும் பலர் அகதி முகாம்களில் வாடுகின்றனர்.

ஜெனீவாவில் நடந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் 700க்கும் மேற்பட்டோர் காணாமற்போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கைதானோர் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் அங்கு மெதுவாகவே இடம்பெற்று வருகின்றன.

பொதுமக்கள் கொல்லப்படுவது; கற்பழிக்கப்படுவது, இடம்பெயர்வது குறித்து இராஜதந்திர பாஷையில் கவலை தெரிவிப்பதைவிட இன்னும் கூடுதலாக அமெரிக்கா செய்யவேண்டியுள்ளது

பர்மாவிலும், ஈரானிலும், ஈராக்கிலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாகக் கூறி அந்நாடுகள் மீது அமெரிக்கா தடைகளை விதிக்க முடியுமானால் இலங்கை இராணுவத்துக்கு வரையறுக்கப்பட்ட உதவிகள் அளிக்கப்படுவதை அமெரிக்கா ஏன் நிறுத்தக்கூடாது?

இலங்கை இன விவகாரத்துக்கு சர்வதேச மத்தியஸ்தத்துடனான மூன்றாம் தரப்பின் உதவியுடன் இரு தரப்பினரிடையேயும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க கிளின்ரன் நிர்வாகம் தீவிரமாக உதவ வேண்டும்.

அவ்வாறான பேச்சுவார்த்தையின் இலக்கு ஐக்கிய இலங்கைக்கு உட்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு கணிசமான சுயாட்சியை அனுமதிக்கும் சமஷ்டி அரசமைப்பை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

இவ்வாறு 'பொஸ்ரன் குளோப்' பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. (இ-ஐ-150)

# இறை மக்களின் சிறப்புத்தன்மை அவர் தம் சாட்சி வாழ்வேயாம்

''நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுப்போனால் எதனால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது''-

மத்தேயு 5 : 13 - 14

உப்புக்குச் சிறப்புத்தன்மை அதனது உவர்ப்புத் தன்மைதான். அது உவர்ப்புத்தன்மையை இழந்து விடுமானால், உப்பானது பயனற்றுப் போய்விடும். அதுபோல இறை மக்களாக அழைக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் சிறப்புத் தன்மை அவர்களின் சாட்சி வாழ்வுதான். அவர்கள் தமது சாட்சி வாழ்வை இழந்து போனால் அவர்களின் வாழ்வு பயனற்றுப் போய்விடும். நாம் பல வேளைகளிலும் இறைவனுக்கு ஆராதனை செய்வதும், அவரை நோக்கிப் பாடல்களைப் பாடுவதும், அவரை நோக்கி வேண்டுதல் செய்வதும் எங்கள் மேலே சுமத்தப்பட்ட கடமை என எண்ணுகிறோம், அவ்வாறு நாம் செய்யாவிட்டால், இறைவன் எம் மீது கோபம் கொள்வார் என எண்ணி, அவரை ஆராதிப்பது எமது பெரிய பெருமையென நினைத்து விடுகிறோம்.

ஆனால் எமது வழிபாடுகள் யாவும் எமது உள்ளத்தில் இருந்து வரவேண்டும். வரலாற்று நாயகனான இறைவன் எம்மைப் படைத்து பராமரிக்கும் உன்னதர் என்பதை உணர்ந்து, அந்த உணர்வின் அடிப்படையில் அவருக்கு சாட்சியாக வாழும் வாழ்க்கையின் மூலம் அவரை நாம் ஆராதிக்கவேண்டும்.

இயேசு சொன்னார்: ''விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக் கடவது''

## ஞாயிறு நற்பிரசாதம்

(மத்தேயு 5 : 15 - 16)

இயேசு இவ்வசனங்களை இறைபணியாளர் என பிரத்தியேகப் படுத்தப்பட்ட மக்களுக்குக் கூறவில்லை. மாறாக, அனேக மக்கள், கூட்டமாக இருப்பதைக் கண்டு மலைமேல் ஏறி இந்த வசனங்களைக் கூறுகிறார். எனவே இறைபணியானது, மற்றவர்களுக்கு இறைவனை வாழ்ந்து காட்டுகின்ற சாட்சி வாழ்வே ஆகும். இச்சாட்சி வாழ்வு வாழ அனைவரையும் இறைவன் அழைக்கின்றார். இறைமக்கள் யாவரும் இறைவனின் திருப்பணிவிடையாளர்கள் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

ஆமோஸ் 3 : 1 - 3 இன்படி ஆண்டவர் இஸ்ரவேலைப் பார்த்துக் கூறியது — ''உங்களை நான் சிறப்பாக அறிந்து கொண்டேன். எனவே உங்கள் அக்கிரமங்களின் நிமித்தம் உங்களை நான் தண்டிப்பேன்'' என்பதாகும்

ஒரு தகப்பன் தன் பிள்ளையில் தான் கொண்டுள்ள உரிமையின் நிமித்தம், அந்தப் பிள்ளை தவறு செய்கின்ற பொழுது, அந்தப் பிள்ளையைத் தண்டிப்பதுபோல்; இறைவனின் பிள்ளைகளான நாம் தவறு செய்யும்போதும் எம்மேல் இறைவன் கொண்டுள்ள உரிமையின் நிமித்தம் அவர் எம்மைத் தண்டிக்கிறார். அத்தகு சூழ்நிலையிலும் சாட்சி வாழ்வில் இருந்து நாம் பின்வாங்கக்கூடாது.

புதிய இஸ்ரவேலாக இறைவனால் அழைக்கப்பட்ட நாம், ''இறைமக்களின் சிறப்புத் தன்மை அவர்களின் சாட்சி வாழ்வுதான். உப்புக்கு எவ்வாறு அதன் உவர்ப்புத்தன்மை சிறப்பு அம்சமாக உள்ளதோ, அதுபோல நமக்கு சாட்சி வாழ்வே சிறப்பு அம்சமாக உள்ளது என்பதை உணர்ந்து, எமது சிறப்புத் தன்மையை இழக்காமல் வாழ்வோமாக.

— சகோ. பி. தேவதாஸ் —

## நாளை

**வைகாசி 12**

**திங்கட்கிழமை**

திதி: சதுர்த்தி முற்பகல் 10.15 வரை.

நட்சத்திரம்: பூராடம் காலை 5.57 வரை. உத்தராடம் பின் இரவு 4.42 வரை.

சுபநேரம்: 11.52 - 1.22

ராகுகாலம்: 7 22-8 52

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூபாலயா

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

**31 – 05 – 1997** 9-30 புதிய நேரம்

★ பூக்கள் தயாரித்தல்
★ பெப்ரிக் பொட்டரி பெயின்டிங்
★ சிகையலங்காரம்
★ மணப்பெண் அலங்காரம்
★ தையல்
★ சமையற் கலை
★ கேக் ஐசிங்

**RUBALAYA**
178, Brown Road, Vannar Ponnai, Jaffna.

(47168)


உ
தேவி துணை

## கோப்பாய் மத்தி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் தரும பரிபாலன சபை பொதுக்கூட்டம்

கோப்பாய் மத்தி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் தரும பரிபாலன சபை பொதுக் கூட்டம் எதிர்வரும் ஆனி மாதம் 14-6-97 சனிக் கிழமை மாலை 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். புதிய அங்கத்தவராக சேரவிரும்பு வோர் பொருளாளருடன் தொடர்புகொள்ளவும். 1997 ஆம், 1998 ஆம் ஆண்டுகளுக்கான புதிய நிர் வாக சபைத் தேர்வும் இடம்பெறும்.

நன்றி

வே. பத்மராசன்
செயலாளர்.

(சி/781)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் 1984 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை ஆசிரியராகவும், உப அதிபராகவும் கட மையாற்றி திடீரென எம்மை விட்டுப் பிரிந்து சென்ற

**திருமதி சிவானந்தன் கலாமணி**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப் பதுடன் அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/உரும்பிராய் றோ. க. த. க. பா. (47162)

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி சிவானந்தன் கலாமணி**

யா/உரும்பிராய் றோ. க. த. க. பாடசாலை உப அதிபர் 23 - 05 - 97இல் இறைபதம் அடைந்து விட் டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது கண வர், புதல்வர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களது துயரில் நாமும் உரிமையுடன் பங்கேற்கின்றோம்.

கோப்பாய் கல்விக் கோட்ட
அலுவலர்கள், அதிபர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
(47167)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் 1984 ஆம் ஆண்டு முதல் இன்று வரை ஆசிரியராகவும், உப அதிபராகவும் கடமையாற்றி திடீரென எம்மை விட்டுப் பிரிந்து சென்ற

**திருமதி சிவானந்தன் கலாமணி**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப் பதுடன் அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பெற்றோர், பழைய மாணவர்கள்
யா/உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
(47163)

## மென்பந்து கிரிக்கட் போட்டி

ஈச்சமோட்டை, விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும், 12 ஓவர்கள் போட்டிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதிநாள், இம்மாதம் 31 ஆம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர் ''A றெட்ணகுமார், (செயலாளர் ஈ. வி. க.) 38, ஈச்சமோட்டை,'' என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

செயற்குழு
ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகம்
(47144)

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே 25

காங்கேசன்துறையில் இருந்து திருமலைக்கு 650 பயணிகளுடன் கப்பல் சேவை இன்று இடம்பெறவிருப்ப தாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

கப்பலில் செல்லப் பதிவு செய்தவர்களில் 561 முதல் 577 வரையும் மற்றும் 580 ஆகிய பட்டியல் இலக்கங் களில் இடம்பெறுவோரை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## ஈழத்தமிழர் ஆதரவாக ஆர்ப்பாட்டம்

லண்டன், மே 25

இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தில் அப் பாவித் தமிழர்கள் கொல் லப்படுவதை ஆட்சேபித்து [illegible]டாளி மக்கள் கட்சி சென்னையில் உள்ள இலங்கை உதவித் தூதரகம் முன் நேற்றும் ஆர்ப்பாட்டம் செய்தது.

அக் கட்சியின் தலைவர் ராமதாஸ் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத் தில் ஆயிரம் பேர் வரை கலந்து கொண்டனர்.

இதேவேளை - இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்துக்கு கண்டனம் தெரி வித்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் எதிர் வரும் 30 ஆம் திகதி சென்னையில் உள்ள இலங்கை உதவித் தூதுவர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்த வுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. (இ-5)

## வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த பி. ஜெயக்குமார் இது குறித்து பி.பி.சி. சிங்களச் சேவைக்குத் தெரிவித்ததா வது:-

வெற்றி உறுதி(ஜெயசிகுறு) இராணுவ நடவடிக்கை இம் மாதம் 13 ஆம் திகதி ஆரம்ப மானது. ஆனால் இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து வன்னிக்கு உணவுப் பொருள் களை எடுத்துச் செல்ல லொறிகளுக்கு படையினர் அனுமதி வழங்கவில்லை.

வன்னிப் பகுதியில் உள்ள உணவுக் களஞ்சியங்கள் யாவும் வெறுமையாகி விட் டன.

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவும் இவ் விடயத்தில் தலையிட்டுள்ளது.

கடந்த வாரம் இக் குழு வெளியிட்ட அறிக்கையில் வன்னிக்கு உணவுப் பொருள் களை எடுத்துச் செல்வது தொடர்பாக தாங்கள்எடுத்த முயற்சிகளைக் கூட பாதுகாப் புப் படையினர் தடுத்துவிட்ட னர் என்று தெரிவித்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார். (இ-10)

## தேவையான...

(முதலாம் பக்கத் தொடர்)

512 ஆவது படையணிப் பிர தேசத்துக்கு உட்பட்ட படை யினர் பலர் யாழ் போதனா வைத்தியசாலையில் இரத்த தானம் செய்ய முன்வந்த போதிலும் 15 பேரின் இரத் தம் மட்டுமே பெறப்பட்டது தெரிந்ததே.

இரத்தத்தைச் சேமித்து வைக்க போதிய வசதி யாழ். போதனா வைத்தியசாலை யில் இல்லாததே இதற்குக் காரணம் ஆகும்.

அப்பொழுது படையினரில் 45 பேரில் இரத்தம் பரிசோத னைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் இரத்த வங்கி யில் இடவசதி இன்மையால் இவர்களின் இரத்தம் பெறப் படவில்லை.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு இரத்தம் தேவைப் படும்போது, இவர்கள் எந்த நேரமும் முன் வந்து இரத்தம் [illegible] தாக தற்பொழுது அறிவிக் கப்பட்டுள்ளது. (இ)

## 2 டாங்கிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

ளதாகவும் புலிகளின் குரல் வானொலி மேலும் தெரிவித் தது.

முதலாவது கட்ட யுத்தத்தில் படையினரின் நான்கு டாங்கிகள் சேதமாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து எதுவும் தெரி விக்கப்படவில்லை. (இ-164)

## விமானங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

எச்சரிக்கை மணி ஒலித்துக் கொண்டு செல்லும் அவசர சிகிச்சை வாகனங்கள் காயமடைந்தவர்களை நகரின் இரா ணுவத்தளத்துக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்ததாக வும் —

மிக மோசமாகக் காயமடைந்தவர்களை ஹெலிகள் அநு ராதபுரத்துக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்ததாகவும் வவு னியாவில் இருந்து மேலும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இராணுவ நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு முன் னர் இரு தரப்பினரும் பீரங்கி மற்றும் மோட்டார் குண் டுத் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தனர் என்று தெரி விக்கப்பட்டது. (இ-164)

உரும்பிராய் வடக்கு
கணேசா சனசமூகநிலையத்தினரின்

## இதய அஞ்சலிகள்

எமது நிலையத்தின் நிருவாக உறுப்பினராகப் பல வருடங்கள் இருந்து நிலையத்தின் வளர்ச்சிக்கு உழைத்து வந்த

**திருமதி சிவானந்தன் கலாமணி**

ஆசிரியர் அவர்கள் 24-05-1997 இல் இறைபதம் அடைந்து விட்டார். அவரின் பிரிவால் துயரம் அடைந் துள்ள குடும்பத்துக்கு எமது அனுதாபத்தையும், இதய அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

கணேசாசனசமூக நிலையம்,
உரும்பிராய் வடக்கு.
நிர்வாகசபையினர்
(47166)

# மரண அறிவித்தல்கள்

திருமதி
**வைரவநாதன் சிவகாமிப்பிள்ளை**

கல்வியங்காடு, 3 ஆம் கட்டையைப் பிறப்பிடமா கவும், மொரட்டுவை Soysa Flats ஐ வதிவிடமா கவும் கொண்ட திருமதி வைரவநாதன் சிவகாமிப் பிள்ளை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr. வைரவநாதனின் அன்பு மனைவியும், சிவசிதம்பரநாதன், சிவபாத சுந்தரம் (நியூசிலாந்து), சிவஞானசுந்தரம், சிவரா ஜேஸ்வரி, சிவகுருநாதன், சகுந்தலாதேவி (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், பவளம், சுகிர்தராணி காலஞ்சென்ற கணேசன் மற்றும் நவமலர், கேதுலிங் கம் ஆகியோரின் மாமியாரும், ருக்ஷா, லாஈஷா, ரேணுகா, நிருஷா, தயாளன், கேசினி, மயூரா, கும ரன், விஷாந்தி, உஷா ஆகியோரின் பேர்த்தியும் ஷருபி, கிர்ஷான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிசை மய[illegible] னத்தில் 23-05-97 இல் நடைபெற்றன.

தகவல்:
சிவகுருநாதன்
(மகன்)

(47152)

**திருமதி சிவானந்தன் கலாமணி**

(உப அதிபர், றோ.க. பாடசாலை உரும்பிராய்)

உரும்பிராய் றோமன் கத்தோலிக்க பாடசாலை உப அதிபர் திருமதி சிவானந்தன் கலாமணி (கலா) காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கா. செல்வநாயகம் – ஜானகி தம்பதியரின் அருமைப் புதல்வியும், ஓய்வு பெற்ற வர்த்தகத் திணைக்கள முகாமையாளர் திரு. சி.சிவானந்தன் அவர்களின் அன்பு மனைவியாரும், காலஞ் சென்றவர்களான சிவஞானம் —இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவப்பிரியன், சிவப் பிரசாந்த் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு. செ. செல்வவிநாயகர் அவர்களின் அருமைச் சகோதரியும், திருமதிகளான பாலசிங்கம், ஞானரத்தினம், சிவபால சுந்தரம்பிள்ளை, ஞானமலர், மகேந்திரன், ஞான மணி (லண்டன்), திருவாளர்கள் சிவலிங்கம் (லண் டன்), சிவபாலன் (வேல்ஸ்), சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 25-5-97 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் உரும்பிராய் இந்துக் கல்லூரி ஒழுங்கையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைகளின் பொருட்டு உரும்பிராய் வடக்கு இருளன் மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தகவல்:
சி.சிவானந்தன்
(கணவர்)

''கமலபதி''
இந்துக்கல்லூரி ஒழுங்கை,
உரும்பிராய் வடக்கு.
(47161)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) [illegible] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரி [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணி மனையில் 25-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org